வசதிகள் குறைவாக இருப்பதால் அங்கே புதியதாக கால் நடை மருத்துவமனையைத் தொடங்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவரமாக அது பற்றி அரசுக்கு எழுதினால் அது பற்றி ஆய்ந்து முடிவு எடுக்கப்படும்.

சென்னை மாநகராட்சி ஆணையர்.

122—(*வினா எண். 7725) திரு. சு. பாலன் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போதுள்ள சென்னை மாநகராட்சி ஆணையர் அரசு சார்பாக மேலை நாடுகளில் மாநகராட்சிகளின் செயல்பாடுகளைப் பற்றி அறிந்துகொள்ள அனுப்பப்பட்டார்களா?

(ஆ) ஆம் எனில், மாநகராட்சி அபிவிருத்தித் திட்டம் ஏதாவது அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தற்போதைய சென்னை மாநகராட்சி ஆணையாளர் திருமதி சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப., 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் 1985 ஆம் ஆண்டு ஜுலை வரை, அமெரிக்காவில் உள்ள பிரின்ஸ்டன் பல்கலை கழகத்தில் பொது மற்றும் அகில உலக விஷயங்களுக்கான உட்ரோ வில்சன் பள்ளியில், பார்வின் பெலோஷிப்-க்காக அனுப்பி வைக்கப்பட்டார். மாநகராட்சிகளின் நிர்வாகங்களைப் பற்றி படிப்பதற்காக அவர் அனுப்பப்படவில்லை. மேற்கூறிய படிப்பு காலம் முடிவடைந்தபின், சென்னை மாநகராட்சியின் மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டம் ஏதும் ஆணையாளரால் சமர்பிக்கப்படவில்லை.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்.

123—(*வினா எண். 8104) திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் மூன்று ஆண்டு பதவிக்காலம் 1984 ஆகஸ்டு திங்களுடன் முடிந்துவிட்டது என்பதும் சட்டப்படி 1984 செப்டம்பர் முதல் அந்த வாரியம் திருத்தி அமைக்கப்பட உத்தரவு வரவேண்டியது இன்னமும் வரவில்லை என்பதும் உண்மையா ?